Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.453/2022

| | |
|---|---|
| | Prosecution PW-1 |
| Deposition of Witness for | Defence |
| | Court |

| | | |
|---|---|---|
| Name | : | சிவக்குமார் |
| Father's Name | : | கணேசன் |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 29.07.2025.

முதல் விசாரணை

1)நான் கந்தம்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். கடந்த 19.03.2022 அன்று மாலை 5.00 மணியளவில் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு இடையில் 7419 என்ற Super XL இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு, டேங்க்கின் உள்ளே தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தேன். 5.45-6.00 மணியளவில் நான் வெளியே வந்து பார்த்தபோது என்னுடைய இருச்சக்கர வாகனம் இல்லை. 4,5 நாட்களாக இருச்சக்கர வாகனத்தை

தேடிப்பார்த்தேன் கிடைக்கவில்லை. 5, 6 நாட்கள் கழித்து வேலாயுதம்பாளையம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னிட்டு 10 நாட்கள் கழித்து காவல்நிலைய்ததிலிருந்து என்னுடைய இருச்சக்கர வாகனம் கிடைத்துவிட்டதாகவும், காவல்நிலையம் வரச்சொன்னதின் பேரில் நான் காவல்நிலையம் சென்றேன். அங்கு ஆஜர் எதிரி இருந்தார் அவர் தான் என்னுடைய இருச்சக்கர வாகனத்தை திருடிய நபர் என்று போலிசார் கூறினார்கள். காவல்நிலையத்தில் இருந்த என்னுடைய இரு சக்கர வாகனத்தை என்னுடைய வண்டிதான் என அடையாளம் காட்டினேன். 4, 5 நாட்கள் கழித்து இந்நீதிமன்றத்திலிருந்து என்னுடைய இருச்சக்கர வாகனத்தை மனு செய்து பெற்றுச்சென்றேன். தற்போது நீதிமன்றத்திலிருந்து பெற்றுச்சென்ற இருச்சக்கர வாகனம் வேலூர் ரோட்டில் நல்லுசாமி பட்டறையில் ரிப்பேரானதால் அங்கு விட்டுவிட்டேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை.

நான் 15 வருடங்களாக கந்தம்பாளையத்தில் வசித்து வருகிறேன். 2022ம் வருடம் நான் விவசாயம் செய்து வந்தேன். புகார் கொடுக்கும் போது வண்டி எனது பெயரில் தான் உள்ளது என்று ஆர்.சி.புக்கை இணைத்து கொடுத்தேனா என்றால் இல்லை. அடுத்த நாள் ஆர்.சி. புக்கை கொடுத்தேன். வண்டி காணாமல் போன பிறகு 25.03.2022 அல்லது 26.03.2022 அன்று புகார் கொடுத்தேன். தமிழ் பார்த்து படிக்க மட்டும் தான் தெரியும். எழுத்து எழுத தெரியாது. நான் புகாரை எழுதவில்லை. யாரோ பெயர் தெரியாத நபரை வைத்து புகாரை எழுதிக்கொடுத்தேன். போலிசார் என்னை விசாரிக்கும்போது, புகாரை நான் எழுதவில்லை என்றும், யாரோ ஒரு நபர் வைத்து எழுதினேன் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். என்னுடைய புகாரில் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் இடையில் தான் இருச்சக்கர வாகனத்தை நிறுத்தி வைத்துள்ளேன் என்று புகாரில் அந்த விவரத்தை எழுதி தான் கொடுத்துள்ளேன். நீர்தேக்க தொட்டிக்கு வளாகத்திற்கு வெளியே நிறுத்தியிருந்தேன் என்று சொன்னால் அதுவும் சரிதான். நான் புகார் கொடுக்கும்போது எதிரியை காவல்துறையினர் பிடித்து வைத்திருந்தனரா என்றால் இல்லை. வண்டி கண்டுபிடித்தபிறகு பார்த்தேன். நான் புகார் கொடுத்ததற்கும் வண்டி கிடைத்ததாக காவல்நிலையத்தினர் சொன்னதற்கும் 10 நாட்கள் இருக்கும். என்னுடைய வாகனம் காணாமல் போய்விட்டது என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியை பழிவாங்கவேண்டும் என்பதற்காக நானும், காவல்நிலையத்தினரும் சேர்ந்து இந்த பொய்யான

வழக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வண்டியை போலிசார் கண்டுபிடித்துவிட்டதாக கூறியபோது எனது வண்டி ரிப்பேராக இருந்ததா என்றால் பூட்டு உடைக்கப்பட்டு, வண்டி ஓட்டமுடியாத நிலையில் இருந்தது. நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் சொல்வது போல் குற்ற சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

அரசு தரப்பில் மறுவிசாரணை. இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ஒம்/.எம்.சார்லஸ் ஆல்பர்ட்,
நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.